பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**18 02 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்திய கடற்படை சார்பில் விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ள சர்வதேச கடற்படை ஆய்வு நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பங்கேற்கிறார்.

2. பங்களாதேஷ் பிரதமராக பதவியேற்றுள்ள திரு. தாரிக் ரஹ்மானுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. திமுக அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றவில்லை என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

4. பாகிஸ்தானின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படைத்த தாக்குதலில் பாதுகாப்பு படையினர் உட்பட 16 பேர் உயிரிந்தனர்.

5. வளரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் நேபாளத்தை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்திய கடற்படை சார்பில் விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ள சர்வதேச கடற்படை ஆய்வு நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பங்கேற்கிறார்.

நாட்டின் கடற்படை திறனை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற உள்ள நிகழ்ச்சியையும் அவர் பார்வையிடுகிறார்.

கடந்த **15**ஆம் தேதி முதல் சர்வதேச கடற்படை ஆய்வு மற்றும் கண்காட்சி தொடங்கி நடைபெற்று வருகிறது.

**100** நாடுகளில் இருந்து கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானம் தாங்கி கப்பல்கள் உள்ளிட்டவை இந்த கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

இந்தியாவின் கடலோர பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் கையில் இந்த கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று விசாகப்பட்டினம் வந்தடைந்த குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை ஆந்திர மாநில ஆளுநர் திரு. அப்துல் நசீர், துணை முதலமைச்சர் திரு. பவன் கல்யாண் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

<<<<>>>>

பங்களாதேஷ் பிரதமராக பதவியேற்றுள்ள திரு. தாரிக் ரஹ்மானுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் **BNP** கட்சி வெற்றி பெற்று புதிய அதிபராக திரு. தாரிக் ரஹ்மான் பதவியேற்றுள்ள நிலையில் அவரை குடும்பத்துடன் இந்தியா வருமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

அவருக்கு பிரதமர் எழுதியுள்ள கடிதத்தில் திரு. தாரிக் ரஹ்மான் தலைமையில் பங்களாதேஷுடன் இந்தியா இணைந்து செயல்பட ஆர்வம் கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே பண்முக அடிப்படையில் இருதரப்பு நல்லுறவுகள் மேலும் வலுப்படும் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகாலமாக வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லுறவை இந்தியாவும்-பங்களாதேஷும் கொண்டிருப்பதாகவும், கலாச்சார உறவுகளிலும், வரலாற்று ரீதியிலும் ஆழமான உறவுகளை கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ள பிரதமர் இருநாட்டு மக்களின் அமைதி மற்றும் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு செயல்பட விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

நமது எதிர்கால ஒத்துழைப்பு மற்றும் கொள்கைகளை வழிகாட்டுவதில் முன்னுரிமை அளித்து வளர்ச்சியை நோக்கிச் செல்ல தாம் ஆர்வத்துடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ள பிரதமர், தேர்தல் வெற்றிக்காக திரு. தாரிக் ரஹ்மானுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்த உச்சிமாநாட்டில் பங்கேற்க புதுதில்லி வந்துள்ள பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று இருதரப்பு பேச்சுகள் நடத்த உள்ளார்.

ஸ்பெயின் அதிபர் திரு. **Pedro Sanchez,** ஃபின்லாந்து பிரதமர் திரு. **Antti Pettri Orpo,** செர்பியா அதிபர் திரு. **Aleksandar Vucic** உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் இன்று பேச்சு நடத்த உள்ளார்.

<<<<>>>>

இந்தியாவிற்கும் - ஃபிரான்சிற்கும் இடையேயான உறவுகளை பிரத்யேகமாக உலக அளவில் மேம்படுத்த இரு நாடுகளும் சம்மதம் தெரிவித்துள்ளன.

இரு நாடுகளுக்கு இடையேயான மேம்படுத்தப்பட்ட நல்லுறவுகளை அமலாக்குவது குறித்து தொடர்ந்து ஆய்வு செய்வற்கு ஆண்டுதோறும் வெளியுறவு அமைச்சர்கள் நிலையிலான பேச்சுவார்த்தைக் குழுவை ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியா - ஃபிரான்ஸ் புத்தாக்க ஆண்டு மற்றும் வலையமைப்பை ஏற்படுத்தவும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாக இரு நாடுகளின் சார்பில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடியும், ஃபிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோனும் மும்பையில் சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்தினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், ஃபிரான்ஸ் இந்தியாவின் மிகப் பழமையான கூட்டாளி நாடுகளில் முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டார்.

<<<<>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக இங்கிலாந்து துணைப் பிரதமர் திரு. **David Lammy** நேற்று புதுதில்லி வந்தடைந்தார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், இந்தியா-இங்கிலாந்து இடையிலான ஒருங்கிணைந்த நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் அந்நாட்டு துணைப் பிரதமரின் வருகை அமைந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியா வலுவான நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், புதுமையை முன்னெடுத்துச் செல்லும் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை பகிர்ந்துகொள்ளும் வகையில் இங்கிலாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களின் வருகை அமைந்துள்ளதாகவும் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஒருநாள் பயணமாக இன்று மேற்குவங்க மாநிலம் செல்கிறார்.

கொல்கத்தா செல்லும் அவர், நாடியா-வின் மாயாபூர் என்ற இடத்தில் உள்ள **Iskcon** தலைமையகத்தில் ஸ்ரீலா பக்தி சித்தாந்த சரஸ்வதி தாக்கூரின் **152**வது ஆண்டு விழாவில் பங்கேற்கிறார்.

<<<<>>>>

தமிழக மக்களுக்கு திமுக அரசு அளித்த 500க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளில் பெரும்பாலான வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

மாநில பிஜேபி சார்பில் சென்னையை அடுத்த அம்பத்தூரில் நடைபெற்ற தெருமுனைப் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், தமிழக மக்கள் இந்த ஆட்சியில் சொல்ல முடியாத துயரத்தை அனுபவித்துக்கொண்டிருப்பதாக கூறினார்.

கல்விக் கடன் ரத்து, பெட்ரோல்-டீசல் விலை குறைப்பு போன்ற பல்வேறு வாக்குறுதிகளை தமிழக அரசு நிறைவேற்றவில்லை என்று டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பாகிஸ்தானின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படைத்த தாக்குதலில் பாதுகாப்பு படையினர் 11 பேர் உட்பட 16 பேர் உயிரிந்தனர்.

**Bajaur** அருகே **Malangi** என்ற இடத்தில் பாதுகாப்பு படையினரின் சோதனைச்சாவடியில் தற்கொலைப்படை தீவிரவாதி

வாகனத்தில் வந்து வெடிகுண்டை வெடிக்கச் செய்ததில் உயிரிழப்பு ஏற்பட்டதாக பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதில் அங்கு பணியில் இருந்த பாதுகாப்பு படையினர் மற்றும் ஒரு சிறுமி உட்பட 16 பேர் உயிரிழந்தனர்.

10க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலையடுத்து அந்தப் பகுதி முழுவதையும் சுற்றிவளைத்த ராணுவத்தினர் தீவிரவாதிகள் நடமாட்டத்தை கண்காணித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

அமெரிக்கா - ஈரான் இடையே அணுசக்தி விவகாரம் தொடர்பான இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக ஈரான் அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

அணுசக்தி விவகாரம் தொடர்பாக ஈரான் கடல் பகுதியில் அமெரிக்க போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட்டதால் பதற்றம் ஏற்பட்ட நிலையில் இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடிவு செய்யப்பட்டது.

அதன்படி ஜெனிவாவில் நடைபெற்ற இரண்டாம் சுற்று பேச்சுவார்த்தைக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு.

அப்பாஸ் அராக்சி தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும், இரு நாடுகளுக்கும் இடையே பொதுவான தொழில்நுட்ப விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

இதனிடையே தீ தடுப்பு தொடர்பான ஒத்திகை மேற்கொள்வதற்காக **Hormuz** ஜலசந்தி தற்காலிகமாக மூடப்படும் என்று ஈரான் அறிவித்துள்ளது.

<<<<>>>>

தலைநகர் தில்லி, பஞ்சாப், ஹரியானா, சண்டிகட் மற்றும் ராஜஸ்தானின் கிழக்குப் பகுதிகளில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், ராஜஸ்தானின் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் புழுதிக்காற்று வீசுவதற்கும் வாய்ப்பிருப்பதாக அந்த மையம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

ஆந்திரா மற்றும் ஒடிசா மாநிலங்களின் கடலோர பகுதிகளில் அடர் பனிமூட்டம் தொடர்ந்து நீடிக்கும் என்றும், வடமேற்கு மாநிலங்களின் ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை **2** முதல் **4** டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மைய அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

வளரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் நேபாளத்தை வென்றது.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

--------------

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

இந்த தொடரின் ஏ பிரிவில் இதுவரை நடைபெற்ற 3 ஆட்டங்களிலும் வெற்றி பெற்று இந்தியா சூப்பர்-8 சுற்றுக்கு ஏற்கனவே முன்னேறியுள்ளது.

முன்னதாக நேற்று பி பிரிவில் இடம்பெற்றுள்ள ஜிம்பாப்வே - அயர்லாந்து அணிகளுக்கு இடையே இலங்கையின் பல்லேகலே-வில் நடைபெற இருந்த ஆட்டம் மழை காரணமாக ரத்து செய்யப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி அளிக்கப்பட்டது.

புள்ளிகள் அடிப்படையில் சூப்பர்-8 சுற்றுக்கு ஜிம்பாப்வே முன்னேறியதால் இந்தப் பிரிவில் அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை ஆஸ்திரேலியா இழந்தது.

**<<<<The End>>>>**